10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 246 வியாழக்கிழமை ஜனவரி 25 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## கடற்படைக்குக் காணி அளவீட்டுக்குத் தடை

யாழ்ப்பாணம், ஜன. 25

ஊர்காவற்றுறையில் கடற்படைக்காக சுவீகரிக்க காணி அளவிடும் முயற்சியை தடுத்து நிறுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா.

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பில் தனியாருக்கு சொந்தமான காணியை கடற்படைக்கு சுவீகரிக்க இன்று அளவீடு செய்யப்படவிருந்தது.

இந்த விடயம் குறித்து காணி உரிமையாளர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு சென்றார். காணி அமைச்சர், நில அளவையாளர் நாயகம் ஆகியோரை தொடர்பு 06▶



# பவள் மோதி சிறுமி பலி!

## புங்குடுதீவில் சோகம்

## மக்கள் கொதிப்பு

புங்குடுதீவு, ஜன. 25

கடற்படையின் பவள் வாகனம் மோதியதில் சிறுமி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சிறுமியை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற மாமன் காயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் புங்குடுதீவு மகா வித்தியாலத்துக்கு அண்மையாக இந்த விபத்து இடம்பெற்றது.

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 9 வயதே ஆன திருலோகநாதன் கேசனா என்ற சிறுமியே இவ்விபத்தில் உயிரிழந்தார்.

மரணமான சிறுமி புங்குடுதீவு றோ.க.த.க. பாடசாலையில் கல்வி கற்று வருகிறார். 06▶

கூட்டமைப்பு வேட்பாளருக்கு

## எதிராக அனந்தி முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவருக்கு எதிராக வடக்கு மகளிர் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வலி. தென்மேற்குப் பிரதேச சபையில் 4 ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளருக்கு எதிராகவே வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

வேட்பாளர் அவரது முகநூலில் கீழ்த்தரமான முறையில் தன்னை விமர்சித் தார் எனக் குற்றஞ் 06▶

## இந்தியாவை அடக்கியது நானே!



கொழும்பு, ஜன.25

'போர்க் காலத்தில் இந்தியாவையே கட்டுப்படுத்திய எனக்கு இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த அணியை வெற்றி பெற வைப்பது ஒன்றும் பெரிய காரியமல்ல." என்று முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச கூறியுள்ளார்.

"மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் எனக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்பை நான் சரியாக நிறைவேற்றினேன். எமது ஆட்சியின் ஆரம்பத்தில் இருந்த பெரிய சவால் போர் மட்டுமே. அதை நாம் இந்த நாட்டு 06▶

## சிறையிருக்கும் கொலையாளிக்கு வன்புணர்வுக்காகவும் தண்டனை

யாழ்ப்பாணம், ஜன. 25

கொலைக் குற்றத்துக்காகத் தண்டனை அனுபவித்து வரும் நபருக்கு சிறுமி வன்புணர்வு வழக்கிலும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இணுவிலைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பிறேமன் என்பவர், கொலைக் குற்றத்துக்காக 10 வருடக் கடூழி 06▶

ஊர்காவற்றுறை பெண் கொலை:

## விசாரணைகள் இனி சி.ஐ.டியிடம்

ஊர்காவற்றுறை, ஜன. 25

ஊர்காவற்றுறையில் கர்ப்பவதிப் பெண் படுகொலை வழக்கு விசாரணை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி ஊர்காவற்றுறையில் ஞானசேகரன் ஹம்சிகா (வயது - 27) என்பவர் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டார். இது தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி திருக்குமார் பொலிஸார் வழக்கை மந்த கதியிலேயே விசாரிக்கின்றனர், மரபணு அறிக்கையைப் பெறுவதிலும் தாமதம் காட்டுகின்றனர் எனச் சுட்டிக்காட் 06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# “புலிகள் மீண்டும் வரமாட்டார்கள்”

**சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு சுமந்திரன் எம்.பி. வழங்கிய பேட்டி**

- தமிழாக்கம்.க.சுரேஷ் -

*கேள்வி: ஆயுதப் போராட்டம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?*

பதில்: ஆயுதப் போராட்டத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால், இலங்கையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானதற்கான காரணத்தையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். 30 வருடங்களுக்கு முன் எமது இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுத்தனர். அது சரியா பிழையா என்று இப்போது எம்மால் தீர்மானிக்க முடியாது.

இருந்தும், இதை முடிவுக்கு கொண்டு வருவதற்கு வரலாற்றில் அரசியல்ரீதியான நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டன. பண்டா–செல்வா ஒப்பந்தம், பண்டா–ட்டலி ஒப்பந்தம் போன்ற



ஒப்பந்தங்கள் இதற்கு சிறந்த உதாரணம். ஆனால், எந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை.

அந்தப் பின்னணியை வைத்துதான் ஆயுதப் போராட்டம் சரியா, பிழையா என்று நாம் முடிவெடுக்க வேண்டியுள்ளது. இருந்தும், தனிப்பட்ட முறையில் ஆயுதப் போராட்டத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை.

நாம் பேசியே பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வு காண வேண்டும். சண்டை பிடித்து தீர்வைக் காண முடியாது. புலிகளின் ஆயுதப் போராட்டத்தை நான் நிராகரிக்கின்றபோதிலும் தனது சமூகத்துக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் ஆயுதம் ஏந்திப் போராடி உயிர்நீத்த அந்த இளைஞர்களின் தியாகத்தை–நோக்கத்தை நான் மதிக்கின்றேன். அவர்கள் தன்னுயிரைக் கொடுத்து தம் இனத்துக்காகச் சேவை செய்தவர்கள்.

எந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்த ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட்டதோ அந்தப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றே ஆக வேண்டும். இதை நாம் உட்கார்ந்து பேசித் தீர்க்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம்.

*கே : யுத்தம் ஆரம்பிக்கும்போது இருந்த பிரச்சினைகளில் ஒன்றேனும் இப்போது தீர்க்கப்படவில்லை என்றா நீங்கள் கூறுகிறீர்கள்?*

ப: அவ்வாறு கூறவில்லை. சிறுபான்மை, பெரும்பான்மை என்று மக்கள் இருக்குபோது அதிகமான சலுகைகள் பெரும்பான்மை இன மக்களின் பக்கமே செல்லும். இதனால் சமமின்மை ஏற்படுகிறது. இதனை இல்லாது செய்வதென்றால் நாட்டைப் பிரிக்காதவாறு நியாயமான அரசியல் தீர்வொன்று தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இதன்மூலம்தான் ஆயுதம் ஏந்துவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்த பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியும்.

*கே: ஒற்றை ஆட்சியின்கீழ் பிரிக்கப்படாத நாட்டில் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு என்ற கொள்கையில் நீங்கள் இருக்கின்றீர்களா?*

ப: ஒருபோதும் பிரிக்கப்பட முடியாத நாட்டிற்குள் வாழ்வதற்கு நாம் தயார். ஒற்றை ஆட்சி என்பது ஒரு நாடு என்றே பொருள். மாறாக,அரச அதிகாரம் ஓரிடத்தில் குவிந்து கிடப்பது என்று பொருள் கொடுக்கக்கூடாது. பிரிக்கப்படாத நாட்டிற்குள் அரச அதிகாரம் பகிரப்படும் ஒற்றை ஆட்சியையே நாம் ஏற்கிறோம். இல்லையென்றால் பெரும்பான்மை இனத்தின் கையில்தான் அரச அதிகாரம் இருக்கும். அதை ஏற்க முடியாது.

அதிகாரம் மாகாணங்களுக்கு பகிரப்படும்போது அந்த மாகாணங்களில் வாழும் சிறுபான்மை இன மக்கள் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இதற்குப் பொருத்தமான தீர்வு சமஷ்டிதான் என்று எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க 1926 இல் அறிமுகப்படுத்தினார்.

அப்போது இதுபற்றி சிலோன் மோர்னிங் லீடர் பத்திரிகைக்கு ஐந்து பக்கங்கள் கொண்ட கடிதங்கள் எழுதினார். பிறகு யாழ்ப்பாணம் சென்று இதைக் கூறினார். சுவிஸ்லாந்தில் இருக்கின்ற சமஸ்டியை அவர் சிபாரிசு செய்தார். ஆனால், யாழ்ப்பாண மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றிருந்தால் அன்றே எமக்கு சமஷ்டித் தீர்வு கிடைத்திருக்கும்.

ஆனால், சமஷ்டி என்பது நாட்டைப் பிரிக்கும் ஒரு தீர்வுப் பொதி என்றே தெற்கு நினைக்கின்றது. அப்படி இல்லை. அமெரிக்கா, கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் சமஷ்டி முறைமை உள்ளது. அந்த நாடுகள் பிளவுபடவில்லையே.

*கே: மாகாண சபை முறைமையின் ஊடாக ஏதோவொரு வகையில் அதிகாரம் பகிரப்பட்டுள்ளது அல்லவா?*

ப: 1987 இல் 13 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக சில அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. ஆனால், அது சரியான பகிர்வு அல்ல. மத்திய அரசு விரும்பினால் அந்த அதிகாரத்தை மீளப் பெற முடியும். ஆளுநர் என்ற ஒருவரை நியமித்து அவரிடமே இந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மக்களிடம் நேரடியாக வழங்கப்படவில்லை. இதை அதிகாரப் பகிர்வு என்று சொல்ல முடியாது.

நிறைவேற்று அதிகாரம் ஆளுநரின் கையில்தான் உள்ளது. மாகாண சபைகளில் ஏதாவது சட்டங்கள் உருவாக்கப்பட்டால் ஆளுநர் அதை அனுமதித்தால் மாத்திரம்தான் அவை சட்டங்களாக மாறும். அதிகாரப் பகிர்வு என்பது மக்களின் பிரதிநிதிகள் பயன்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதிமுறைமை இருப்பதால்தான் ஆளுநருக்கும் ஜனாதிபதியிடம் இருந்து நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட்டால் ஆளுநருக்கு நிறைவேற்று அதிகாரம் செல்வதற்கு வாய்ப்பில்லை.

இதனால்தான் நாம் நிறைவேற்றுமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முயற்சி செய்கிறோம். இது தொடர்பில் பேசி வருகின்றோம். இணக்கப்பாட்டுக்கும் வந்துள்ளோம். மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அதிகாரங்கள் பகிரப்படுவதன் மூலம்தான் இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைக் காணமுடியும்.

இது பல்லினங்கள் வாழும் நாடு. நாம் தொடர்ந்தும் இந்த நாட்டில்தான் வாழப்போகிறோம். வாழவும் வேண்டும். ஒருவர் உரிமையை ஒருவர் மதித்து வாழ வேண்டும். அதற்கான ஒரு பொருத்தமான ஒரு முறைமை உருவாக்கப்பட வேண்டும்.

*கே: வெள்ளையர்கள் எம்மிடம் நாட்டை ஒப்படைக்கும் போது வெஸ்ட் மினிஸ்டர் முறைமையை எமக்கு அறிமுகப் படுத்தினர். இதற்கு மேலதிகமாக செனட்சபை முறைமையும் எம்மிடம் இருந்தது. இவ்வாறான முறைமையின் ஊடாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதா?*

ப: புதிய அரசமைப்பில் இதுபற்றி பரிசீலித்து வருகின்றோம். அதை இரண்டாம் சபை என்று அழைக்கின்றோம். மாகாணங்களில் உள்ள பிரதிநிதிகள் அதற்குள் உள்வாங்கப்பட்டு அரசு உருவாக்கும் சட்டங்களுக்கு அவர்களின் பங்களிப்பைப் பெறுவதற்கு பரிசீலித்து வருகிறோம்.

மாகாணங்களுக்குத் தேவையான விடயங்களை கொழும்புதான் தீர்மானிக்க வேண்டும் என்ற நிலைமை இல்லாமல் போகும். எல்லா பிரதேசங்களில் இருந்தும் எல்லா இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த இரண்டாம் சபைக்கு உறுப்பினர்கள் உள்வாங்கப்படுவர்.

*கே: பல்லினங்கள் வாழும் இந்த நாட்டில் எவரும் எந்த இடத்திலும் வாழ முடியும். அந்த அடிப்படையில் எல்லா இடங்களிலும் எல்லா இன மக்களும் வாழ்வதை நாம் காண்கிறோம். ஆனால், வடக்கில் அப்படி இல்லையே?*

ப: இல்லை. மூன்று இனங்களும் வாழ்கின்றனர். இனம், கலாசாரம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் ஊர், தமிழ் ஊர், சிங்கள ஊர் என மக்கள் பிரிந்தேதான் வாழ்கின்றனர். இது இயற்கையாக ஏற்பட்ட ஒன்று. யாரும் கட்டாயப்படுத்தி வாழ வைக்கவில்லை.

இருந்தாலும்,இந்த இனம் இந்த ஊரில்தான் வாழ வேண்டும் என்று சட்டம் போடமுடியாது. எங்கு வாழவேண்டும் என்று அந்த மக்களே தீர்மானிக்கவேண்டும். ஆனால்,அரசு மக்களை திட்டமிட்டு குடியமர்த்துவதுதான் இங்கு பிரச்சினை.

*கே: இனங்களுக்கிடையே சந்தேகங்களை நீக்குவதற்கான முறைமை ஒன்று இல்லையா?*

ப: இது பெரிய – ஆபத்தான சந்தேகம். இது தீர்க்கப்பட வேண்டும். நாட்டைப் பிரிக்கும் ஆயுதப் போராட்டம் ஒன்று அப்போது இருந்ததால் இனியும் அது ஏற்படுமா என்ற சந்தேகம் சிங்கள மக்கள் மத்தியில் உண்டு. அது நியாயமான சந்தேகம். அதேபோல், தமது பிரச்சினைகள் என்றுமே தீர்க்கப்படவே மாட்டாதா என்ற சந்தேகம் தமிழர்களிடம் உண்டு. இந்த இரண்டு சந்தேகங்களும் தீர்க்கப்பட வேண்டும்.

நாட்டைப் பிரிக்க நாம் விரும்பவில்லை என்ற உறுதிமொழியை நாம் சிங்கள மக்களுக்கு வழங்குகின்றோம். பிரியாத நாடு என்று சிங்களவர்கள் சொல்லும்போது அதற்கும் மேலாக என்றுமே பிரிக்கப்பட நாடு என்று நாங்கள் கூறுகின்றோம்.

அதேபோல், என்றுமே மீளப்பெற முடியாத அதிகாரப் பகிர்வை வழங்குவதன் மூலம்தான் தமிழர்கள் மனதில் இருக்கும் சந்தேகத்தை நீக்க முடியும். இது நடந்தால்தான்

(05ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli
வியாழன். 25 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## நேற்றுப் புங்குடுதீவில், இன்று ....?

படையினரின் பவள் கவச வாகனத்தில் மோதுண்டு, 9 வயதுப் பிஞ்சொன்றின் உயிர் புங்குடுதீவில் நேற்றுப் பறிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அந்த இயந்திர எமன், ஒற்றை விளக்கோடு இரவிரவாக, பறந்து திரியும் போதே ஊர் மக்கள் அது குறித்துக் கடற்படையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

புங்குடுதீவு ஒன்றும் வீதியெங்கும் மின்விளக்கோடு பிரகாசித்துக் கொண்டிருக்கும் நகரமல்ல. மாலை 6 மணிக்குப் பிறகு, அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் வீடுகளில் இருந்து வரும் வெளிச்சத்தை தவிர மற்றைய இடங்களில் இருள் கவ்வியிருக்கும். அப்படியான இருள் வெளியில், தறிகெட்டு தாறுமாறாகத் திரியும் பவள் கவச வாகனம் நடமாடித் திரிபவர்களைப் பந்தாடக் கூடும் என்பது மக்களின் பயம். அந்தப் பயத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் அந்தப் பவளின் ஒற்றைக் கண், வெளிச்சத்தை இழந்திருந்தது. எனவே குறித்த பவள் வாகனம் இரவிலோ, பகலிலோ நடமாடும் போது, அதன் நிர்ணயிக்கப்பட்ட வேகத்தில் செலுத்துமாறும், பழுதடைந்த முன்பக்க விளக்கினைச் சரிசெய்து, உரிய வெளிச்சத்தோடு பயணிக்குமாறும் பலமுறை கடற்படையிடம் மக்கள் தரப்பில் சொல்லப்பட்டிருந்தது.

ஆனால் எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்கொலிதான். இரவில் எமனாக மாறும் என்று நினைத்திருக்க, காலை வேளையில் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த சிட்டொன்றைச் சிதைத்து விட்டிருக்கிறது அந்தப் பவள் கவச வாகனம். இந்த விபத்துக்கும் பிரதான காரணம், கண் மண் தெரியாத வேகமே.

• டிப்பர், பவள் போன்ற கனரக வாகனங்கள் , மட்டுப்படுத்தப்பட்ட வேகத்திலேயே பயணிக்க வேண்டும் என்ற நிபந்தனையோடுதான் வீதிகளில் பயணிக்க அனுமதிக்கப்படுகின்றன. அவற்றின் மட்டுப்படுத்தப்பட்ட வேக அளவு, வாகனத்தின் பின்பக்கத்தில் பெரிய எழுத்தில் தெளிவாகக் குறிக்கப்பட்டும் இருக்கிறது. ஆனால் அந்த வேகக் கட்டுப்பாட்டை எந்தவொரு கனரக வாகனங்களும் கடைப்பிடித்தது கிடையாது. ஓட்டுவது டிப்பராகவோ, பவளாகவோ இருப்பினும் ஏதோ ஜெட் விமானத்தைச் செலுத்துவதாகவே அவற்றின் சாரதிகள் நினைக்கிறார்கள். இதனால் அவர்களை அறியாமலேயே வாகனங்களை அதிவேகத்தில் ஆர்முடுகச் செய்து, கடைசியில் உயிர்கொல்லிகளாக மாறிவிடுகிறார்கள்.

புகைப்பரிசோதனை, ஆவணப்பரிசோதனை என ஒரு வாகனத்தின் பயணித்தலுக்கு ஆயிரத்தெட்டுச் சோதனைகளைக் கோருகின்ற பொலிஸாரும், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களமும், குறித்த வாகனங்கள் அனுமதிக்கப்பட்ட வேகத்துக்கமையவே பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்து அக்கறை காட்டுவதில்லை. அப்படிக் காட்டியிருந்தால், டிப்பர்களால் ஏற்படுகின்ற விபத்துக்களில் பெரும்பாலானவை தவிர்க்கப்பட்டிருக்கும். புங்குடுதீவிலும் சின்னஞ்சிறு மாணவியின் உயிரும் பவளால் காவு கொள்ளப்படாது தவிர்க்கப்பட்டிருக்கும்.

என்ன சொல்லியும் யார் தான் கேட்பார். நேற்றுப் புங்குடுதீவில்.. இன்றைக்கு எங்கேயோ? விபத்துக்கள் நம் வாழ்வின் கட்டாய நிகழ்வாகி விட்டன. கொஞ்சமேனும் சாரதிகள், வீதிகளில் பயணிப்போர் மீது அக்கறை காட்டுங்களேன்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# சபையில் சண்டையிடாமல் அபிவிருத்திக்கு உழைப்போம்

## சுயேச்சைக் குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

"யாழ்.வல்வெட்டித்துறை நகர சபையின் ஆட்சியைக் கடந்த காலத்தில் கைப்பற்றி ஆட்சி செய்தவர்கள் தமக்குள் சண்டை போட்டார்களே தவிர மக்களுக்கான அபிவிருத்தி வேலைகள் எதனையும் செய்யவில்லை. இந்நிலையில் மக்களுடைய அபிவிருத்தியை மட்டுமே இலக்காகக் கொண்டு மக்களுடைய கோரிக்கைக்கு அமைய நாங்கள் தேர்தலில் களமிறங்கியுள்ளோம். மக்கள் எங்களுக்கான ஆதரவை வழங்கினால் வல்வெட்டித்துறை நகரசபையின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். எந்த சந்தர்ப்பத்திலும் பலம்வாய்ந்த அரசியல் கட்சிகளின் பக்கம் சாயாமல் தொடர்ந்து மக்களுக்கான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு உழைப்போம்" என வல்வெட்டித்துறையில் மீன் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சை குழுவின் தலைவரான சபாரட்ணம் செல்வேந்திரா கூறியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"கடந்த காலத்தில் வல்வெட்டித்துறை நகரசபையின் ஆட்சியை கைப்பற்றியவர்கள் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டு காலத்தை வீணடித்தார்கள். அவர்கள் மக்களுக்குத் தேவையான அபிவிருத்தியைச் செய்யவில்லை. இந்நிலையில் மக்களுக்குத் தேவையான அபிவிருத்தியைச் செய்வதற்காக மக்கள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் நாங்கள் சுயேச்சைக் குழுவாக மீன் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். பிரசாரத்திற்காக நாங்கள் செல்லுமிடங்களில் மக்கள் எமக்கு ஆதரவு தருகிறார்கள்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கூறும் கருத்துக்களும் அவருடைய செயற்பாடுகளும் மக்களையும், எங்களையும் கவர்ந்திருக்கின்றன. முதலமைச்சருக்கு எப்போதும் ஆதரவான நிலைப்பாட்டினை நாங்கள் பின்பற்றுவோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## ரவியின் உரைக்கு சபாநாயகர் தடா!

கொழும்பு, ஜன 25

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றில் விசேட உரையை நிகழ்த்த முன்னாள் நிதி அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நேற்று பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் ஒழுக்கப் பத்திரத்துக்கு அமைய ரவி உரையாற்ற மறுத்துவிட்டார். (ச)

## கடத்தல் மரக்குற்றிகள் கிளிநொச்சியில் மீட்பு

கிளிநொச்சி, ஜன.25

சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட பெறுமதி வாய்ந்த முதிரை மரக்குற்றிகள் கிளிநொச்சிப் பொலிஸாரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டன.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் கிளிநொச்சி உதயநகர் பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றுக்கு கடத்தப்பட்ட நிலையிலேயே குறித்த மரக்குற்றிகள், கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ் அதிபரின் விசேட அணியினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சிக் காடுகளில் பெறுமதியான முதிரை மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு , கடத்தப்பட்டு வருகின்றமை தொடர்வதாகப் பல தரப்பட்டவர்களாலும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையிலேயே மேற்படி மரக்குற்றிகளும், அவற்றைக் கடத்திய இருவரும் பிடிபட்டுள்ளனர். (அ)

## கடலில் மிதந்த 110 கிலோ கஞ்சா

யாழ்ப்பாணம், ஜன.25

வடக்குக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது 110 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக வடமாகாண கடற்படைக் கட்டளைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கேரளக் கஞ்சா கடத்தல் நடவடிக்கை இடம்பெறவுள்ளதாக , கடற்படைக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றினையடுத்து விசேட ரோந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே மருதங்கேணி, தாழையடிக் கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த நிலையிலேயே குறித்த கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுமார் 50 பொதிகளாகப் பொலித்தீனால் சுற்றப்பட்ட நிலையில் அவை காணப்பட்டதாகவும், இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் வடமாகாணக் கடற்படைக் கட்டளைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மீட்கப்பட்ட கேரளக் கஞ்சாப் பொதிகள் அனைத்தும் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்





முல்லைத்தீவு, ஜன.25

வன்னி மண் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு ஒலுமடு ம.வி, வன்னிவிளாங்குளம் மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடாசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு புத்தகப் பை மற்றும் பாடசாலை உபகரணங்கள் என்பன நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த விச்சு விஷ்ணு என்பவரின் நிதி அனுசரணையுடன் வன்னி மண் நற்பணி மன்ற உறுப்பினர் ந.பரணிதரன் என்பவரால் இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. யுத்தம் காரணமாக பாதிப்படைந்த வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள, குறித்த பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



## இன்று நாளும் கோளும்


25.01.2018 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 12 ஆம் நாள்

அட்டமி மு.ப 10.45 | பரணி 03.36 வரை | மரணயோகம்

இராகுகாலம் 01.30 - 03.00 | சுபநேரம் மு.ப. 10.30 - 11.30 | எமகண்டம் பி.ப. 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜெயம் | சாந்தி | மகிழ்ச்சி | அனுகூலம் | ஆர்வம் | கீர்த்தி | முயற்சி | ஒய்வு | ஈகை | நன்மை | பெருமை | முயற்சி |

# புலிகளைத் தோற்கடிக்க நாமும் ஒத்துழைத்தோம்



## ஒத்துக்கொள்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன.25

'புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்ததோடு, அதற்கான ஒத்துழைப்பையும் நாம் வழங்கினோம்."

-இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸநாயக்க கூறியுள்ளார்.

"யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் அது அப்போதே முடிந்திருக்காவிட்டால் தமிழர்களும் சிங்களவர்களும் மோதிக்கொள்ளும் நிலை உருவாகி இருக்கும். இதனால் புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை நாங்கள் எடுத்தோம். இதற்கான ஒத்துழைப்பை நாங்கள் வழங்கினோம்.

இருந்தும்,எங்கள் பக்கத்தில் ஒரு குறைபாடு உண்டு. யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் அந்தப் பகுதில் இருந்த மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்தி இருக்க வேண்டும். ஆனால்,அதை நாங்கள் செய்யவில்லை. இதை நாங்கள்ஒரு குறையாகவே பார்க்கின்றோம்

வரலாற்றில் எமது ஆட்சியாளர்கள் சிறுபான்மை இன மக்களின் உள்ளங்களை கொள்ளைகொள்ளத் தவறிவிட்டனர். இதனால் நிலைமை யுத்தம் ஒன்று ஏற்படும் அளவுக்கு விரிந்து சென்றது. அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவும் இருக்கின்ற அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காகவும் வடக்கிலும் தெற்கிலும் அரசியல் கட்சிகள் இனவாதத்தைத் தூண்டியே வந்தன. அந்த இனவாத்தின் உச்சக்கட்டம்தான் யுத்தம்.

யுத்தம் 2009 இல் முடிவுக்கு வந்தது. ஆனால்,தெற்கில் இராணுவத்தில் இணைந்திருந்த இளைஞர்களும் வடக்கில் புலிகளுடன் இணைந்திருந்த இளைஞர்களும் உயிரிழந்தனர். தெற்கில் இந்த இராணுவச் சிப்பாய்கள் வீரர்களாக உயர்த்தப்பட்ட அதேவேளை,வடக்கில் உயிரிழந்த புலி உறுப்பினர்கள் மாவீரர்களாக உயர்த்தப்பட்டனர்.

யுத்தம் முடிந்ததன் பின்னர் பழைய நிலைமைகள் எல்லாம் மறக்கப்பட்டு புதியதொரு நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், எமது ஆட்சியாளர்கள் அப்படி செய்யவில்லை" என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

# சிறுவர் நாடகக் கொண்டாட்டம் யாழ்.பொதுநூலகத்தில் நாளை

யாழ்ப்பானம், ஜன.25

யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் சிறுவர் நாடகக் கொண்டாட்டம் ஆரம்பமாகிறது.

செயல் திறன் அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பஞ்சவர்ண நரியார்' சிறுவர் நாடகம் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நாளை வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணிக்கு மேடையேறவுள்ளது.

யாழ்ப்பாணப் பொதுசன நூலகமும், செயல் திறன் அரங்க இயக்கமும் இணைந்து நடத்தும் 'சிறுவர் நாடகக் கொண்டாட்டம் - 2018' யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நாளை மாலை 4.00 மணிக்கு 'பஞ்ச வர்ண நரியார்' சிறுவர் நாடக மேடையேற்றத்துடன் ஆரம்பமாகிறது.



ஒவ்வாரு மாதமும் கடைசி வெள்ளிக் கிழமைகளில் சிறுவர் நாடகங்களை மேடையேற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறுவர்களின் குதூகலிப்புக்கான அரியதொரு களமாக இது அமையும்.

பரபரப்பான வாழ்க்கைச் சுமை மற்றும் கல்விச்சுமையால் அல்லலுறும் சிறுவர்களின் மனவிடுவிப்புக்கான களமாகவும் இது அமையும்.

சிறுவர்களின் உள சமூகவிருத்திக்கான மகிழ்வூட்டலையும் அறிவூட்டலையும் அடிப்படையாகக் கொண்ட சிறந்த சிறுவர் நாடகங்கள் மேடையேறுகின்றன. சிறுவர்களையும் பெற்றோரையும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளார்கள்.(அ)

# சிறுவனைத் தாக்கிய சிறைக்காவலர்கள்

## மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

கிளிநொச்சி, ஜன.25

சிறைக்காவலர்களால் கிளிநொச்சி சிறுவன் தாக்கப்பட்ட விவகாரம் தொடர்பில், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.



கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் நேற்றுமுன்தினம் சிறைக்காவலர்கள் பயணித்த சிறைச்சாலைப் பஸ்ஸூம் துவிச்சக்கரவண்டி ஒன்றும் விபத்துக்குள்ளாகின. இதன்போது, துவிச்சக்கர வண்டியில் பயணித்த சிறுவன் சிறு காயங்களுக்குள்ளாகியிருந்தான்.

குறித்த விபத்து துவிச்சக்கர வண்டியில் பயணித்த சிறுவனின் தவறாலேயே நிகழ்ந்தது எனத் தெரிவித்து சிறு காயங்களுடன் உணவகம் ஒன்றினுள் நின்ற சிறுவனை சிறைக்காவலர்கள் மனிதாபிமானம் இன்றி சரமாரியாகத் தாக்கினர். இது தொடர்பான புகைப்படங்களும், வீடியோப் பதிவுகள் ஊடகங்களில் வெளிவந்திருந்தன. தாக்குதலுக்குள்ளான சிறுவன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின் நேற்று மதியம் வீடு திரும்பியிருந்தான்.

இந்த நிலையில்,யாழ் .மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள், நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கருகில் உள்ள சிறுவனின் இல்லத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய ஆணையாளர் க. கனகராஜ் தலைமையிலான குழுவினர் சிறுவனிடம் வாக்கு மூலத்தை பதிவு செய்ததோடு, பொலிஸார், சட்ட வைத்திய அதிகாரி மற்றும் சம்பந்தப்பட்ட சிறைசாலை அதிகாரிகள் ஆகியோரின் அறிக்கைகளைப் பெற்று உரிய விசாரணைகள் முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளனர். (அ)

# இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்தே இரகசியத் தொடர்பாம்






தனது ஆட்கள் மூவர் அண்மையில் மைத்திரி பக்கம் பாய்ந்ததில் விமலுக்கு சற்று வருத்தம்தான். அதிலும் இரண்டு வருடங்களாக அவர்கள் மைத்திரியுடன் இரகசியத் தொடர்பை வைத்திருந்ததை அறிந்தபோது ரொம்பவே உடைந்து விட்டாராம் விமல்.

மைத்திரி தரப்பையும் மஹிந்த தரப்பையும் ஒன்றிணைக்க வேண்டும் என்றொரு யோசனையை தற்போது மைத்திரி பக்கம் தாவிய குழுவினர் விமலிடம் முன்வைத்தனர். அவ்வாறு ஒன்றிணைவதை விமல் விரும்பாத போதிலும் அந்த யோசனையை அவரது கட்சியின் அரசியல் பீடத்தில் சமர்ப்பித்து விவாதிப்பதற்கு இடங்கொடுத்தார்.

அரசியல்பீடத்தின் அனுமதியுடன் மைத்திரியுடன் இரண்டு தடவைகள் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது. மைத்திரி தரப்பு வழங்கிய எழுத்துமூலமான சில நிபந்தைகளுடன் விமல் வீரவன்ஸ ஒத்துப்போகவில்லை.

இருந்தாலும், விமலுக்குத் தெரியாமல் மைத்திரி தரப்புடன் இணைவது என்ற திட்டத்தை அந்தக் குழு இரகசியமாகவே வைத்திருந்தது.

இதன் விளைவாக அவர்கள் அண்மையில் மைத்திரி பக்கம் தாவினர். இதை சற்றும் அறிந்திராத விமல் உடைந்து போனார். இப்போது விமல் தேடிப் பார்த்ததில் அவர்கள் விமலுக்குத் தெரியாமல் இரண்டு வருடங்களாக மைத்திரியுடன் இரகசியத் தொடர்பைப் பேணி வந்துள்ளமை தெரியவந்துள்ளதாம். யாரை நம்புவது என்று தெரியாமல் இப்போது அவரது கட்சிக்காரர்கள் எல்லோரையும் சந்தேகத்துடனேயே பார்த்து வருகிறாராம் விமல்.

# புலிகள் மீண்டும்.... (02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரச்சினைகளுக்கு – சந்தேகங்களுக்கு முடிவுகட்ட முடியும்.

*கே: தமிழர்களுடன் சேர்ந்து வாழ முடியாது என்ற பிழையான கருத்து சிங்கள மக்கள் மத்தியில் திணிக்கப்பட்டிருப்பதுபோல் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ முடியாது என்ற பிழையான கருத்து தமிழ் மக்கள் மத்தியிலும் திணிக்கப்பட்டுள்ளதா?*

ப : ஆம்.இரண்டு பக்கங்களிலும் இவ்வாறு நடந்துள்ளது. இது சரி செய்யப்பட வேண்டும். கல்வி முறைமையின் ஊடாக இனங்கள் பற்றிய நல்லெண்ணம் விதைக்கப்பட வேண்டும். "நாங்கள்" என்ற சொற்பதம் பாவிக்கப்படும்போது அது இலங்கையர் என்பதைக் குறிக்க வேண்டும். ஓரினத்தை மாத்திரம் குறிக்கக்கூடாது. நான் இலங்கையன் என்று எல்லோரும் பெருமையுடன் கூறும் நிலைமைக்கு இந்த நாட்டு நிலைமை மாற வேண்டும்.

தமிழர், சிங்கள மொழியையும் சிங்களவர்கள் தமிழ் மொழியையும் கற்க வேண்டும். பாடசாலைகளில் இந்த மொழிகளை சரியான முறையில் போதிப்பதற்கு ஏற்ப அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

*கே : தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது அதனுடன் இணைந்திருந்த அத்தனை கட்சிகளும் இப்போதும் அப்படியே உள்ளனவா?*

ப: உருவாக்கப்பட்டபோது மூன்று கட்சிகள் சேர்ந்தன.பின்பு நான்காக அதிகரித்தன. பின்பு ஐந்தாகின.இப்போது மூன்று கட்சிகள் மாத்திரமே உள்ளன. இருந்தும், இந்தக் கூட்டமைப்புதான் வடக்கு–கிழக்கில் தமிழர்களின் பிரதான பிரதிநிதியாக உள்ளது. முன்னாள் புலிகளும் அரசியல் கட்சியொன்றை உருவாக்கி அரசியலில் இறங்கியுள்ளனர். 2015 இல் எமது கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவதற்கு முயன்றபோது அதற்கு நாம் அப்போது இடங்கொடுக்க வில்லை. இப்போது எம்முடன் சேர்ந்தே போட்டியிடுகின்றனர்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியாக அவர்களை நாம் சேர்க்கவில்லை. ஆனால், எமது வேட்பாளர் பட்டியலில் அவர்களுக்கு இடங்கொடுத்துள்ளோம். இவர்கள் புனர்வாழ்வு பெற்றவர்கள். ஆயுதங்களை முழுமையாக கீழே வைத்தவர்கள். இவர்களை ஜனநாயக நீரோட்டத்தில் இணைப்பது சிறந்தது என்று நாம் தீர்மானித்தே அவர்கள் எம்முடன் இணைந்து போட்டியிட அனுமதித்தோம்.

*கே: புலிகளின் செயற்பாடுகள் இப்போதும் உண்டா?*

ப: இலங்கையில் இல்லை. வெளிநாடுகளில் இவர்கள் இரண்டு, மூன்று பிரிவுகளாக பிரிந்துள்ளனர். ஆனால்,புலிகள் என்று யாரும் இப்போது இல்லை. ஆனால், வேறு பெயர்களில் செயற்படலாம். அவர்கள் இப்போது என்ன கொள்கையில் இருக்கின்றார்கள் என்று எமக்குத் தெரியாது. ஆனால், இலங்கையில் அப்படியொரு நிலைமை இல்லை.

*கே: யுத்த காலத்தில்கூட புலிகளின் செயற்பாடுகள் வெளிநாடுகளில்தான் இருந்தன. இங்கு இருக்கவில்லை அல்லவா?*

ப: இது முக்கியமான விடயம். 13 லட்சம் வரையான இலங்கை தமிழர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். அவர்கள் இங்கு எதிர்கொண்ட வன்முறைகள் காரணமாகவே அங்கு சென்றனர். அவர்கள் இலங்கை தமிழர்களாக இல்லாமல் அந்தந்த நாட்டு தமிழர்களாகவே உள்ளனர்.

நாம் அவர்களுடன் பேசியுள்ளோம். அவர்களுக்கு இலங்கை வருவதற்கு விருப்பம்.அல்லது இந்த நாட்டுடன் நல்லதொரு தொடர்பை ஏற்படுத்துவதற்கு விரும்புகின்றனர். இங்குள்ள தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்தால்தான் அவர்களின் விருப்பம் சாத்தியப்படும். தமிழர்களுக்கு பிரச்சினை இல்லை என்ற நிலைமை உருவாக வேண்டும்.

*கே: மைத்திரி அரசைக் கொண்டு வருவதற்கு தமிழ்-முஸ்லிம்கள் அதிக பங்களிப்பு வழங்கினர். அதற்கான பலனை அவர்கள் இப்போது அடைகின்றனரா?*

ப: அப்படிக்கூறுவது கஷ்டம். அவர்களின் அதிகமான பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. சில பிரச்சினைகள் மாத்திரமே தீர்க்கப்பட்டுள்ளன. அப்போது எமக்கு வேறு வழி இல்லாததால் மைத்திரிக்கு ஆதரவு வழங்கினோம்.மகிந்த ஆட்சியில் ஜனநாயகம் இருக்கவில்லை.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே புலிகள் ஆயுதம் ஏந்தினர். தனி நாட்டைக் கோரினர். அந்தக் கோரிக்கையை நாம் ஏற்காதபோதிலும், மக்களுக்கு பிரச்சினை உண்டு என்பதில் உடன்படுகின்றோம். புலிகள் இல்லாமல் போனதன் பின்பும் பிரச்சினைகள் இருந்தன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அப்போது மகிந்த நடவடிக்கை எடுக்கவில்லை.

நாம் அவருடன் பேசினோம். எதுவும் நடக்கவில்லை. யுத்த வெற்றியால் அவர் இவற்றையெல்லாம் மறந்து இருந்தார். இதனால்தான் நாம் வேறு வழியைத் தேட வேண்டியேற்பட்டது.மைத்திரிக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டை எடுத்தோம்.

இப்போது மூன்று வருடங்கள் கலந்துவிட்டன. சிலர் திருப்தியடைகின்றனர். சிலர் மகிழ்ச்சியடைகின்றனர். 50 வீதமான நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. அதேபோல், காணாமல் போனவர்களின் பிரச்சினை பெரும் பிரச்சினையாகும். அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா இல்லையா என்று தெரியாது.

அதேபோல்,அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் இப்போது உடனே தீர்க்கப்பட வேண்டியுள்ளது. அப்படி நடந்தால்தான் ஆட்சி மாற்றம் தொடர்பில் தமிழர்கள் முழுமையாக மகிழ்ச்சியடைவர்.

மீதி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதற்காகவே நாம் இந்த அரசுக்கு ஆதரவு வழங்கிக்கொண்டு இருக்கின்றோம். தீர்வை நோக்கி விரைவாக நகர வேண்டியுள்ளது.

*கே: மகிந்தவின் ஆட்சியில் இலங்கை-இந்திய உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது. இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது.இது எங்களுக்கு நன்மையளிக்கும் நிலைமையை உருவாக்கியுள்ளது என்று நீங்கள் நம்புகிறீர்களா?*

ப: ஆம். தமிழ் நாட்டில் வாழும் மக்கள் இலங்கை தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்என்றுவிரும்புகின்றனர்.இங்கு பிரச்சினை தீரவில்லை என்றால் தமிழ் நாட்டு தமிழர்கள் அதை எதிர்ப்பர்.அது இந்தியாவின் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாக அமையும். புதிய அரசு தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கும்போதுதான் தமிழ் நாடு திருப்தியடையும்அவ்வாறு தமிழ் நாடு திருப்தியடையும்போதுதான் இந்தியாவின் மத்திய அரசும் திருப்தியடையும்.

அடுத்ததாக மகிந்த அரசு இந்தியாவின் பாதுகாப்பு விவகாரத்தை கணக்கில் எடுக்கவில்லை. ஆனால்,இந்த அரசு அப்படி இல்லை என்ற நம்பிக்கை இந்தியாவுக்கு வந்துள்ளது. இவர்கள் இந்தியாவின் பாதுகாப்புமீது அக்கறை எடுக்கின்றனர். இந்தியா மிகப் பெரிய நாடு. இந்தியா அதன் பாதுகாப்பில் அதிக அக்கறை எடுத்தே தீரும்.

*கே: தமிழர்கள் ஏன் இராணுவத்தில் இணைவதில்லை? அவர்களுக்கு விருப்பம் இல்லையா?*

ப:இல்லை. அவர்களை இராணுவத்தில் சேர்ப்பதில்லை.மூவின மக்களும் இராணுவத்தில் இருக்க வேண்டும். பொலிஸிற்கும் அதிகமான தமிழர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

*கே: உங்களுக்கு கொலை அச்சுறுத்தல் இருந்தது உண்மையா?*

ப: அப்படியொன்று இருக்கின்றது என்றுதான் எனக்கும் சொல்லப்பட்டது.இது தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டனர். கிளைமோர் குண்டு மூலம் என்னைக் கொல்வதற்கு திட்டமிடப்பட்டதாகச் எனக்கு சொல்லப்பட்டது.இதை நான் நம்புகிறேன். சொல்லப்படும் திகதிகளில் நான் எங்கே இருந்தேன்என்ன செய்தேன் என்பதை வைத்துப் பார்க்கும்போது இந்த அச்சுறுத்தல் இருப்பது உண்மையென்றே எனக்குப் படுகிறது.

ஆனால், அதற்கான காரணம் எனக்குத் தெரியாது.யாரின் தேவைக்காக நான் கொல்லப்படவிருந்தேன் என்று தெரியாது. அரசியல் காரணங்களாகத்தான் இருக்க வேண்டும்.அச்சுறுத்தல் தொடர்ந்தும் உள்ளதா என்று தெரியாது.

*கே: ஆவா குழு புலிகளாக இருக்க முடியும் என்ற சந்தேகம் எழுகின்றது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?*


ப: புலிகள் மீண்டும் வருவதற்கான வாய்ப்புகள் அறவே இல்லை.ஆவா போன்று பல குழுக்கள் உள்ளன. அவர்கள் 18,19 வயது இளைஞர்கள். இது சினிமா படங்கள்போல் குழுக்களுக்கிடையிலான சண்டைபோலவே எங்களுக்குத் தெரிகின்றது.

*கே: இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு உண்டா?*

ப: யுத்த காலத்தில் வடக்குத் தமிழர்கள் மீன்பிடிக்காக கடலுக்குச் செல்வது தடை செய்யப்பட்டிருந்தது.அந்தச் சந்தர்ப்பத்தை தமிழக மீனவர்கள் நன்றாகப் பயன்படுத்தினர்.இலங்கை கடற்பரப்பிற்கு வந்து மீன் பிடித்துச் சென்றனர். அது அவர்களுக்கு பழகிப்போய்விட்டது. அதை நாம் நிறுத்துவதற்கு முயற்சி செய்கின்றபோது இந்திய மீனவர்கள் இதற்கு எதிராக செயற்படுகின்றனர். மூன்று, நான்கு வருடங்களுக்கு முன் ஒரே இரவில் 500 படகுகள் வந்து கடலை முழுமையாக சுத்தம் செய்துவிட்டுச் சென்றிருக்கின்றன. இது தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக மீன்பிடித்துறை அமைச்சருடன் இணைந்து மூன்று தடவைகள் இந்திய சென்றுள்ளேன்.

இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதுதான் இந்தப் பிரச்சினைக்கே காரணம். இந்த முறையைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதை நிறுத்துவதற்காக தனிநபர் பிரேரணை ஒன்றையும் நான் நாடாளுமன்றில் கொண்டு வந்தேன். இழுவைப் படகுகளை முற்றாகத் தடை செய்தால் இந்திய மீனவர்கள் இலங்கை கடலுக்கு வரமாட்டார்கள்.

இந்த முறைமை தடை செய்யப்பட வேண்டும் என்று இந்தியாவின் மத்திய அரசுகூட ஏற்றுக்கொண்டுள்ளது. அவர்களுடன் நாம் நடத்திய பேச்சில் அவர்கள் இணக்கம் தெரிவித்தனர். இப்போது இந்திய மீனவர்களின் வருகை கணிசமான அளவு குறைவடைந்துள்ளது. இலங்கை –இந்திய உறவில் விரிசல் ஏற்படுவதற்கும் இரு நாடுகளுக்கிடையில் தப்பெண்ணம் ஏற்படுவதற்கும் இந்த மீனவப் பிரச்சினைதான் காரணம். – என்றார்.



## ஒரு தீர்வு வரச் சம்மதியாங்கள் போலை கிடக்கு

இண்டைக்கு காலையிலை பேப்பர் கடையிலை ஒரு பெரிய பிரச்சினையாப் போச்சுது. நல்ல காலம் முதலி நிண்டிட்டான். பேப்பர் வந்ததும் பிந்தித்தான். ஒரு பகுதி பேப்பர் வாங்க வந்தினம். இன்னுமொரு பகுதியும் வந்தினம். வந்த ஆக்களைப் பாத்து ஒரு பகுதி சொல்லிச்சினம். வீட்டுப் பேப்பரை வேண்டாதையுங்கோ எண்டு. அதைப் பாத்து மற்றப் பாட்டி சொல்லிச்சினம் சைக்கிள் பேப்பரை வேண்டாதையுங்கோ எண்டு. உடனை கதைவளி துவங்கிவிட்டுது. பேச்சுப்பட்டு அடிபிடிப்படுகிற அளவுக்கு வந்திட்டுது. நிண்ட ஆக்கள் இரண்டு பகுதியையும் பேசிக் கலைச்சு விட்டிட்டினம்.

அடிபிடிப்பட்ட சனம் கலைஞ்சு போனாலும் அந்த வாடை கனநேரமாக் கிடந்திது. பேச்சுப்பட்ட நேரம் பரிமாறின கதைபேச்சைக் காது குடுத்து கேக்கேலாமைப் போச்சு. அவ்வளவு தூஷணம். நாலைஞ்சு தலைமுறையை இழுத்தெல்லாம் கதைச்சவை. அதைத் திருப்பிச் சொல்ல வாய் கூசும்.

ஒண்டை மட்டும் சொல்லலாம். வீடு எண்டால் என்ன? சைக்கிள் எண்டால் என்ன? கோழி எண்டால் என்ன? ஆடு எண்டால் என்ன? தங்களுக்குத் தாங்கள், சண்டை பிடிச்சுப் பொதுச் சனத்துக்கு என்ன நடக்கப் போகுது? சனத்துக்கு ஒரு இலாபமும் இல்லை. நிதானமா நடக்காட்டால் எல்லாம் மோசமாப் போவிடும்.

தினம் தினம் அரசியலிலை இருக்கிற ஆக்களைப்பற்றி வாற கதையளைக் கேக்க வெக்கமாக் கிடக்கு. சனத்துக்குச் செய்தது முழுக்கமுழுக்க நம்பிக்கைத் துரோகம். முந்தி உவை ஒண்டா இருக்கேக்கை உந்தக் கதை வெளியிலை வரேல்லை. இப்ப கன்னை பிரிஞ்சாப் போலை தான் ஆளையாள் வெட்டிறன் கொத்துறன் எண்டும், அவை இதைச் செய்தவை, இவை அதைச் செய்தவை எண்டு பட்டியல் போடினம்.

பப்ளிக்காக் காட்டிக் குடுத்தவையும் எங்கடை ஆக்கள். ஆருக்கும் வெளியிலை தெரியாமல் காட்டிக் குடுத்ததும் எங்கடை ஆக்கள்தான். எப்பவும் நம்பிக்கைத் துரோகம் செய்ததும், அப்பப்ப வந்த அரசாங்கத் திட்டை வசதி, வாய்ப்பை வாங்கிக் கொண்டு செய்தது எத்தினை எத்தினை துரோகம் தெரியுமோ? இத்தினை அழிவுக்குப் பிறகும் எப்பிடி காசு வாங்கிக் கொண்டு காட்டிக் குடுக்க மனம் வருகிதோ? எங்களுக்குத் தெரியாது.

தங்களுக்கு வோட்டைப் போடச் சொல்லி எத்தினையோ காரணத்தைச் சொல்லினம். அதைக் கேட்டால் உண்மை எண்டு நம்ப வேண்டித்தான் கிடக்கு. ஒரே கட்சி ஆக்களின்ரை கூட்டம் வேறை வேறை இடத்திலை நடக்கும். போய்ப் பாருங்கோ. எல்லாம் முன்னுக்குப் பின்னாலை முரண்பட்ட கதை. ஒரு ஆள் ஒண்டைச் சொல்லும். அதை மறுத்து மற்றாள் சொல்லும். தங்களுக்கையே ஒரு திடமான கொள்கை இல்லாதவை என்னெண்டு சனத்தைக் காப்பாற்றிறது. வீட்டுக்கையே பலவிதமான கதை. வன்னியிலை ஒரு கதை. வவுனியாவிலை ஒரு கதை வட்டுக்கோட்டையிலை ஒரு கதை. வந்தாறுமூலையிலை ஒரு கதை. வடக்குக் கிழக்கை ஒட்டப்போறம் எண்டு ஒரு கதையை இவை சொல்ல, முஸ்லிம் ஆக்கள் அதுக்குச் சம்மதம் இல்லை எண்டு சொல்லினம். தங்களுக்கு எல்லாம் பிறம்பா வேணுமாம். தங்களைத் தாங்களே ஆளவேணும் எண்டு றிசாட் பாட்டி கதை சொல்லினம்.

வரவரப் பிரச்சினை முத்திக் கொண்டு வருகிதே ஒழிய, தீந்தபாடில்லை. இன்னும் இறுகும்போலை கிடக்கு. ஒரு தீர்வு வர விடாங்கள். சிங்களச் சனம் இல்லை. எங்கடை ஆக்களே தீர்வுக்குச் சம்மதிக்க மாட்டினம் போலை.

**- வில்லங்கம் விநாசி**

# பிணைமுறி மோசடி அறிக்கை: பெப்ரவரி 20, 21 இல் விவாதம்

கொழும்பு, ஜன 25

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் எதிர்வரும் பெப்ரவரி 20,21ஆம் திகதிகளில் விவாதம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

குறித்த 20, 21 ஆம் திகதிகளில் கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்றிருந்த பாரிய நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கைகள் மற்றும் பிணைமுறி மோசடி அறிக்கை ஆகியன மீது விவாதம் நடத்த அனைத்துக் கட்சித் தலைவர்களும் இணங்கியுள்ளனர்.

இந்த இரண்டு அறிக்கைகளையும் சபைக்கு ஆற்றுப்படுத்துவது தொடர்பில் அடுத்த வாரம் ஜனாதிபதி அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து கலந்துரையாடத் தீர்மானித்துள்ளார் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அடுத்த நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி நடத்தப்படும் என்றும், குறித்த தினத்தில் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் புதிய ஒழுக்கக் கோவைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பில் விவாதிக்கப்படும் என்றும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவுகள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சபாநாயகர் கூறியுள்ளார். (ச)

# முதலமைச்சரால் நாட்டுக்கு அபகீர்த்தி

## சபையில் சொன்னது கூட்டமைப்பு

கொழும்பு, ஜன 25

ஊவா மாகாண முதல்வர் பதுளை தமிழ் மகளிர் வித்தியாலயத்தின் பெண் அதிபரை முழந்தாளிட வைத்து மாகாணத்துக்கு மாத்திரமல்ல உலகளாவிய ரீதியில் நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளார்.

அவரின் கல்வி அமைச்சைப் பறித்தது வரவேற்கக்கூடியதாகவுள்ளபோதிலும் பெண் அதிபருக்கு நீதியை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதியும் துறை சாந்தவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடற்றொழில்கள் திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையகப் பகுதியில் கடும் வறுமைக்கும் கஸ்டத்துக்கும் மத்தியில் படித்து ஒருவர் அதிபராக வருவது எட்டாக்கனியாகவுள்ளது.

இவ்வாறான சூழலில் பதுளை தமிழ் மகளிர் வித்தியாலயத்தின் பெண் அதிபர் பவானியை ஊவா முதல்வர் வீட்டுக்கு அழைத்து முழந்தாளிடச் செய்துள்ளார். இது நாட்டுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயற்பாடாகும். நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்றத்திலும் அந்தப் பெண் கண்ணீர் சிந்தித் தமக்கு நேர்ந்த கொடுமையை விபரித்திருந்தார்.

எனவே, அவரின் செயற்பாடுகள் குறித்து கடும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியும், துறை சார்ந்தவர்களும் இவருக்கு உரிய நடவடிக்கை எடுத்து நீதியை நிலைநாட்ட வேண்டும்-என்றார். (ச)




# தொடர்ச்சிகள்

## விசாரணைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டினார். மரபணு அறிக்கையைப் பெற தாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். தொடர்ந்து இரு தரப்பாரின் வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த நீதிவான், விசாரணையை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் பாரப்படுத்துமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். அதுவரை சந்தேகநபர்களின் விளக்க மறியலையும் நீடித்தார். (ச)

## பவள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமியின் மாமன் பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றுள்ளார்.

கடற்படையினருக்கு உணவு கொண்டு வேகமாக எதிரே வந்த பவள் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது.

பின்னாலிருந்த சிறுமி பவளின் முன்சில்லுக்குள் அகப்பட்டு நசிந்து பலியானார்.

சிறுமியை ஏற்றிச் சென்ற மாமன் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

### மக்கள் கொந்தளிப்பு

கடற்படைச் சாரதியின் அசட்டையே இந்த விபத்துக்குக் காரணம் எனத் தெரிவித்த மக்கள் ஆத்திரத்துடன் கடற்படை சாரதியை தாக்க முயன்றனர். தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவியதால் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

மேலும், பவளின் ரயர்கள் நன்கு தேய்ந்து விட்டன. இதனால் பிறேக் சரியாக பிடிக்காது. ஆனால் எந்நேரமும் சாரதி பவளை வேகமாகவே செலுத்துகிறார். இரவில் ஒற்றை ஒளி விளக்குடன் வேகமாகப் பயணிக்கிறது. இது தொடர்பாக 'கோதம்பர" இராணுவ முகாம் பொறுப்பதிகாரிக்கு பல தடவைகள் முறையிட்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனக் கோபாவேசத்தோடு மக்கள் தெரிவித்தனர்.

### கடற்படை சாரதி கைது

விபத்தை ஏற்படுத்திய கடற்படைச் சாரதி மக்களின் தொடர் போராட்டங்களை அடுத்துக் கைது செய்யப்பட்டார்.

விபத்து நடந்தவுடன் பவளின் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தார். ஆத்திரமடைந்த மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சில மணி நேரப் போராட்டத்தையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, ஐந்தாயிரத்துக்கும் மேற்படாதவர்கள் வசிக்கும் புங்குடுதீவில் நான்கு கடற்படை முகாம்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## இந்தியாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் ஒத்துழைப்புடன் வெற்றிகொண்டு நாட்டுக்குப் பூரண சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தோம்.

அந்த நேரத்தில் இந்தியாவை சரிக்கட்ட வேண்டிய தேவை எங்களுக்கு ஏற்பட்டது. ஆரம்பத்தில் புலிகளுக்கு பயிற்சி அளித்தது இந்தியாதான் என்ற உண்மையை கூறுவதற்கு நாம் பயப்பட வேண்டியதில்லை. இந்தியாதான் புலிகளைக் காப்பாற்ற, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும் கொண்டு வந்தது.

பண்டாரநாயக்க விரட்டியடித்த சர்வதேச இராணுவம் இந்திய அமைதிப் படை வடிவில் இலங்கைக்குள் நுழைந்தது. அப்படிப்பட்ட இந்தியாவை போர்க் காலத்தில் கட்டுப்படுத்தும் பணியைச் செய்தது வேறு யாருமல்ல, நான்தான். அது மாத்திரமன்றி ஐக்கிய நாடுகள் சபையையும் அதனுடன் இணைந்த நிறுவனங்களையும் சர்வதேச தரத்துக்கு ஏற்ப சமாளித்தோம்.

அப்படிப்பட்ட இந்தியாவையே கட்டுப்படுத்திய எனக்கு இந்தத் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளையும் தோற்கடித்து, மகிந்த அணியை வெற்றி பெறச் செய்வது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்கு வாக்களித்த 58 லட்சம் பேரும் இன்றும் மகிந்தவுடன்தான் உள்ளனர். எமது வெற்றி மிகவும் இலகுவானது. நிச்சயிக்கப்பட்டது"- என்றார். (ச)

## சிறையிலிருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யச் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். இவருக்கே சிறுமி மீதான படுகொலை வழக்கில் 5 வருடங்களுக்கு ஒத்தி வைத்த 2 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

2012 மார்ச் 08 ஆம் திகதி கோப்பாய் பகுதியைச் சேர்ந்த சிறுமியை கிளிநொச்சி அக்கராயன் பகுதிக்குக் கொண்டு சென்றவர், அங்கு சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார்.

இது தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று, பின்னர் யாழ். மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது. குற்றவாளிக்கு எதிராக 4 குற்றங்கள் முன்வைக்கப்பட்டன.

முதல் குற்றமான வன்புணர்வுக்கு எதிராக 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. இரண்டாம், மூன்றாம் குற்றங்களுக்காக 5 வருடங்களுக்கு ஒத்தி வைத்த 2 ஆண்டு சிறையும் 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த உத்தரவிடப்பட்டது. நான்காம் குற்றத்துக்காகவும் 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 ஆண்டு கடூழிய சிறையும், தண்டமாக 12 ஆயிரம் ரூபாவும் விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 30 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்கவும் பணிக்கப்பட்டது. (ச)

## எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டி நேற்றுமுன்தினம் அனந்தி முறைப்பாடு அளித்தார்.

முறைப்பாட்டையடுத்து அமைச்சரை சமரசப்படுத்த வேட்பாளர் முயன்றபோதும் அதை அவர் நிராகரித்து விட்டார். இதையடுத்து பொலிஸார் வேட்பாளரிடம் நேற்று விசாரணைகளை நடத்தினர்.

இதேவேளை அமைச்சர் அனந்தி சசிதரனும் குறித்த வேட்பாளரும் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## கடற்படைக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட அவர், பல விடயங்களை சுட்டிக் காட்டினார். மேலும் இந்தக் காணி தொடர்பில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் வரை காணி அளவீட்டை மேற்கொள்ளக்கூடாது என வலியுறுத்தினார்.


# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1991 - 07 - 17

மறைவு 2013 - 01 - 19



## தர்மகுலசிங்கம் பானுஷா

திதி - வளர்பிறை அட்டமி

உன் சிரித்த முகம்
நினைவலையாய் ஆடுது
நெடுங்கால வாழ்வது நிலைக்காமல் பேனதே

உன் பிரிவால் எம்மனம் துயர்கொண்டு வாழுதே
தெய்வத்தின் திருவடிக்கு சென்றவளே
தேம்பி நின்று நினைக்கிறோம்
அன்று நீவாழ்ந்த வாழ்வின் சிறப்பதை

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

# 5 வருட சிறை!



ராஞ்சி, ஜன. 25


கால்நடைத் தீவன ஊழல் தொடர்பான மூன்றாவது வழக்கில் பீகார் மாநில முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கி சிபிஐ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற சுமார் 900 கோடி ரூபா மதிப்பிலான கால்நடைத் தீவன ஊழல் தொடர்பாக முன்னாள் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் மற்றும் மேலும் சிலருக்கு எதிராக மொத்தம் 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ராஞ்சியில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இவ்வழக்குகளில் மொத்தம் 76 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. விசாரணை நடந்த காலத்தில் 14 பேர் உயிரிழந்தனர். 3 பேர் அரசுத் தரப்பு சாட்சிகளாக மாறினர். இருவருக்கு ஏற்கனவே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஒருவர் தலைமறைவாக உள்ளார். மீதமுள்ள 56 பேரில் இரு அரசு ஊழியர்கள் மற்றும் 4 கால்நடைத் தீவன வியாபாரிகள் என மொத்தம் 6 பேர் வழக்கிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டனர்.

லாலு பிரசாத் யாதவ், முன்னாள் முதல்வர் ஜெகன்நாத் மிஸ்ரா, முன்னாள் அமைச்சர் வித்யாசாகர் நிஷாத், சட்டசபை பொதுக் கணக்கு குழு தலைவர் ஜெகதீஷ் சர்மா, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் துருவ் பகத், ஆர்.கே.ராணா, 3 முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட 50 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

அதன்பின்னர் தண்டனை தொடர்பான வாதங்கள் நடைபெற்றன. இந்த வாதம் முடிவடைந்த நிலையில், நேற்று பிற்பகல் தீர்ப்பளித்த நீதிபதி, குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட லாலு மற்றும் ஜெகன்நாத் மிஸ்ரா ஆகியோருக்கு தலா 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் தலா 5 லட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டார்.



# 'பத்மாவதி'க்கு எதிர்ப்பு!

புதுடெல்லி, ஜன. 25

'பத்மாவத்' பட விவகாரம் தொடர்பாக வடமாநிலங்களில் போராட்டம் மற்றும் வன்முறை பரவியுள்ளமையால் படம் இன்று வெளிவருமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சர்ச்சைக்குரிய இந்திப்பட இயக்குநர் சஞ்சய் லீலா பன்சாலியின் 'பத்மாவதி' படம், ராஜபுத்ர வம்சத்தை சேர்ந்த ராணி பத்மாவதியின் வரலாற்றைத் தவறாகத் திரித்து எடுக்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. இதனால், 'பத்மாவதி' படத்துக்கு எதிராக பெரும் போராட்டங்கள் நடந்தன. அதைத் தொடர்ந்து, படத்தின் பெயரை 'பத்மாவத்' என மாற்றியும், காட்சிகளை மாற்றி அமைத்தும் வெளியிடத் தணிக்க்கைக் குழு அனுமதி அளித்தது.

இதையடுத்து இந்தப் படம் இன்று (25ஆம் திகதி) வெளியாகவுள்ளது. படத்துக்கு மாநில அரசுகள் பிறப்பித்த உத்தரவுகளை உச்ச நீதிமன்றம் அகற்றியது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியது மாநில அரசுகளே என்று கூறி படத்தை வெளியிடத் தடையில்லை என்றது.

படத்துக்கு நிலவியை தடையை உச்சநீதிமன்றம் நீக்கியதையடுத்து, வடமாநிலங்களில் போராட்டம் வெடித்து உள்ளது. அங்கு பெரும் களேபரமே ஏற்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்டபடி இந்தப் படம் வெளிவருமா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ஐ)

# உடல் தானத்துக்காக லண்டனில் கோயில்

லண்டன், ஜன.25

.லண்டனில் உடல் உறுப்பு தானம் செய்ய வலியுறுத்தும் வகையில் கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

லண்டனில் உள்ள பொப்ஸ் ஸ்ரீ சுவாமிநாராயண் கோவிலில் 50 பேர் திரள்கிறார்கள், இங்கு அவர்கள் கடவுளை வணங்குவதற்காக வருவதில்லை, உடல் உறுப்புத் தானம் குறித்துப் பேசுவதற்காக வருகிறார்கள். இந்துக்கள் மத்தியில் உடல் உறுப்பு தானம் குறித்து தவறான புரிதல் இருக்கும் நிலையில் அதைக் களைவதற்காகத்தான் இந்தச் சந்திப்பு ஒருங்கிணைக்கப்பட்டு இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தலிபான்களை வெளியேற்றுக

வோஷிங்டன், ஜன.25

தலிபான் தலைவர்களைப் பாகிஸ்தானிலிருந்து அந்த நாடு வெளியேற்ற வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் இன்டர்கான்டினென்டல் ஹோட்டலில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுக் கொண்டதைத் தொடர்ந்தே அமெரிக்கா பாகிஸ்தானுக்கு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.


இதுகுறித்து வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் சாரா சாண்ட்ரஸ் கூறும்போது, "தலிபான் தலைவர்களை கைது செய்யவோ அல்லது நாட்டிலிருந்து வெளியேற்றவோ பாகிஸ்தானிடம் கேட்டுக் கொண்டுள்ளோம்.

ஆப்கானிஸ்தானில் பொதுமக்கள் மீதான இந்தத் தாக்குதல் அந்த நாட்டுடனான எங்களது உறவை பலப்படுத்தியுள்ளது. இந்தத் தீவிரவாதத் தாக்குதலுக்கு எதிராக சிறப்பாகச் செயற்பட்ட ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படைக்கு வாழ்த்துக்கள்" என்றார்.

ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிராக உள்நாட்டுப் போரில் ஈடுபடும் தலிபான்களுக்கு பாகிஸ்தான் ஆதரவு அளிப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது. இதன் காரணமாக பாகிஸ்தான் இராணுவத்துக்கான 1,621 கோடி ரூபா நிதியுதவியை அமெரிக்கா நிறுத்திவைத்துள்ளது.

முன்னதாக காபுல் நகரிலுள்ள புகழ்பெற்ற இன்டர்கான்டினென்டல் ஹோட்டலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நுழைந்த தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 22 பேர் பலியாகினர். பலியானவர்களில் 14 பேர் வெளிநாட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இரசாயனக் காய்கறிக்கு சிக்கிமில் அனுமதியில்லை




சிக்கிம், ஜன.25

இரசாயனத்தை பயன்படுத்தி விளைவிக்கப்பட்ட தானியங்கள் மற்றும் காய்கறிகளுக்கு ஏப்ரல் 1 ஆம் திகதிக்குப் பின்னர் அனுமதியில்லை என அதிரடியாக அறிவித்துள்ளார் இந்தியாவின் சிக்கிம் முதல்வர் பவன் குமார் சாம்லிங்.

இந்தியாவிலேயே முற்றிலும் இயற்கை வேளாண்மைக்கு மாறிய பெருமையைப் பெற்றிருக்கிறது சிக்கிம். இந்த மாநில மக்கள் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் இல்லாமல் விவசாயம் செய்து வருகின்றனர். அந்த மாநில முதல்வர் பவன் குமார் சாம்லிங்கின் முயற்சியால், நவீன முறை விவசாயத்துக்கு மாற்றாக, பாரம்பரிய விவசாய முறையை மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

இங்கு, 76,393 ஹெக்டேயர் பரப்பளவில் இயற்கை விவசாயம் நடந்து வருகிறது. மிளகு, ஏலக்காய், இஞ்சி, மஞ்சள், பழ வகைகள் அங்கு பயிரிடப்பட்டு வருகின்றன. மக்கள் அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்ளும் காய்கறிகளை அதிகளவில் இயற்கை முறையில் பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிக்கிம் மாநிலத்தில் கடந்த ஆண்டு, 80,000 மெட்ரிக் தொன் காய்கறிகள் அறுவடை செய்யப்பட்டபோதிலும், 1000 மெட்ரிக் தொன் காய்கறிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது. எனவே இம்முறை கூடுதலாகக் காய்கறி உற்பத்தியை மேற்கொள்ள வசதியாக, ஏப்ரல் 1 திகதிக்குப் பின்னர் வெளி மாநிலங்களில் இருந்து, இரசாயனத்தை பயன்படுத்தி அறுவடை செய்யப்பட்ட காய்கறிகளை இறக்குமதி செய்வதில்லை என முதல்வர் பவன் குமார் சாம்லிங் முடிவு செய்துள்ளார். (அ)



# பிரான்ஸில் கூகுள் கூடம்

பரிஸ், ஜன.25

பிரான்ஸில் செயற்கை நுண்ணறிவு கூடத்தை அமைக்க கூகுள் முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் மற்றும் கூகுள் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை இடையிலான சந்திப்பில் உடன்பாடு எட்டப்பட்டதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சுந்தர் பிச்சை கூறுகையில், "பிரான்ஸ் நாட்டின் விஞ்ஞானம், கலை மற்றும் கல்வித் துறை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள சிறந்த வளர்ச்சி மற்றும் சாதனைகள் தான் கூகுள் தனது செயற்கை நுண்ணறிவியல் ஆய்வு மையத்தை உருவாக்கக் காரணம்" எனத் தெரிவித்துள்ளார்.

இதுமட்டுமல்லாமல் கூகுள் தனது மூன்றாவது தலைமை அலுவலகத்தை பரிஸில் திறப்பது குறித்தும் முடிவெடுத்துள்ளது. ஏற்கனவே கூகுளின் இரண்டு தலைமை அலுவலகங்கள் கலிபோர்னியா மற்றும் சுவிட்ஸர்லாந்தில் அமைந்துள்ளன.

இதற்கிடையே பேஸ்புக் நிறுவனமும் 2015 இல் பரிஸில் திறக்கப்பட்ட தனது செயற்கை நுண்ணறிவு மையத்தின் ஊழியர்களின் எண்ணிக்கையை இரு மடங்கு உயர்த்தப்போவதாக அறிவித்துள்ளது. மேலும் ஆய்வு மையத்தை மேம்படுத்த 2022ம் ஆண்டு வரை 10 மில்லியன் யூரோ டொலர் செலவிடப் போவதாகவும் பேஸ்புக் தெரிவித்துள்ளது. (ஆ)

# காதலியின் சடலத்துடன் உறவு கொண்ட இளைஞர்

மொஸ்கோ,ஜன.25

ரஷ்யாவில் இளைஞர் ஒருவர் தனது முன்னாள் காதலியைக் கொடூரமாகக் கொலை செய்து, அந்தச் சடலத்துடன் பாலியல் உறவு கொண்ட சம்பவத்தை சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது


குறித்த சம்பவத்துக்குப் பின்னர் அந்த இளைஞர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஆர்ட்டோம் இஸ்ஹாகோவ் என்ற 19 வயது இளைஞர் ரட்டானியா ஸ்ற்றோக்கோவா என்ற இளம் பெண்ணைக் காதலித்து வந்துள்ளார். இருவரும் ஒரே குடியிருப்பில் வசித்தும் வந்துள்ளனர். இந்த நிலையில் ரட்டானியா வேறொரு இளைஞருடன் நெருக்கமாகியதால், ஆர்ட்டோமுடனான காதலை முறித்துக் கொண்டுள்ளார்.

இதில் ஆத்திரமடைந்த ஆர்ட்டோம் தனது முன்னாள் காதலியைத் திட்டமிட்டு தனது அறைக்கு வரவழைத்துள்ளார்.

பின்னர் அவரைக் கொடூரமாக தாக்கிய ஆர்ட்டோம் சித்திரவதை செய்து கத்தியால் குத்தியுள்ளார். குற்றுயிராக கிடந்த ரட்டானியாவுடன், பாலியல் உறவு வைத்துக் கொண்டுள்ளார் ஆர்ட்டோம். இந்தச் சம்பவத்தை உடனடியாக சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட இவர் இரு வீட்டாரிடமும் மன்னிப்புக் கோரி விட்டு தற்கொலை செய்துள்ளார். (அ)

# வேகத்தில் வீழ்ந்தது இந்தியா



ஜொகன்னஸ்பேர்க், ஜன. 25

தென்னாபிரிக்க வீரர்களின் வேகத்தை சமாளிக்க மாட்டாமல் 187 ஓட்டங்களுக்கு சுருண்டது இந்திய அணி.

இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி ஜொகன்னஸ்பேர்க்கில் நேற்றுத் தொடங்கியது.

ரோகித் சர்மா, அஸ்வினுக்குப் பதிலாக ரகானே, புவனேஷ்குமார் ஆகியோருடன் களமிறங்கியது இந்தியா. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

கே.எல். ராகுல் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார். தொடர்ந்து முரளி விஜய் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதனால் 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

மூன்றாவது விக்கெட்டுக்காக புஜாரா - விராட் கோஹ்லி இணைந்து பொறுப்பாக ஆடினர். புஜாரா 54 பந்துகளை சந்தித்து ஒரு ஓட்டத்தைப் பெற்று பார்வையாளர்களை வெறுப்பேற்றினார்.

சிறப்பாக ஆடிய கோலி 101 பந்துகளில் அரைச் சதம் அடித்தார். கோலி 54 ஓட்டங்களில் நிகிடியின் பந்தில் ஆட்டமிழந்தார். 3ஆவது விக்கெட்டுக்காக இருவரும் 84 ஓட்டங்களை சேர்த்திருந்தனர்.

முதல் முறையாக களம் இறங்கிய ரகானே 9 , பார்த்தீவ் படேல் 2, ஹர்திக் பாண்டயா 0 என ஆட்டமிழந்தனர். 173 பந்துகளை சந்தித்த புஜரா அரைச்சதம் அடித்து வெளியேறினார்.

பின்னர் வந்த கடை நிலை வீரர்களும் நிலைத்து ஆடவில்லை. முகமது ஷமி 8 , இசாந்த் சர்மா 0, ஓரளவுக்கு தாக்குப்பிடித்த புவனேஷ்குமார் 30 ஓட்டங்களுடன் வீழ்ந்தனர்.

ஒட்டுமொத்தமாக அணியில் கோலி, புஜாரா, புவனேஷ்வர் ஆகிய 3 வீரர்களைத் தவிர மற்ற வீரர்கள் அனைவரும் ஒற்றை படை இலக்க ஓட்டத்துடன் நடையைக் கட்டினர்.

இறுதியில் இந்திய அணி 77 ஓவர்களில் 187 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. தென்னாபிரிக்கத் தரப்பில் ரபாடா 3 விக்கெட்டுகளையும், மோர்கல், நிகிடி, ஹெலுக்வேயா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (ச)

# பெடரர் முன்னேற்றம்

மெல்பேர்ன், ஜன.25

அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், காலிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்ற பெடரரும் , சங்கும் அரையிறுதிக்கு முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டி மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிச் சுற்று ஆட்டம் ஒன்றில் இரண்டாம்நிலை வீரரான ரோஜர் பெடரர், செக் குடியரசின் தோமஸ் பெர்டிச்சை எதிர்கொண்டார்.



இந்தப்போட்டியில், இருவரும் ஒருவருக்கொருவர் ஈடுகொடுத்து விளையாடினர். இதனால் ஆட்டம் சூடு பிடித்தது. முதல் செற்றை பெடரர் 7-6 எனப் போராடிக் கைப்பற்றினார். அடுத்து நடைபெற்ற இரண்டாவது செற்றில் சிறப்பாக விளையாடிய பெடரர் அந்த செற்றையும் 6-3 எனக் கைப்பற்றினார். தொடர்ந்து அதிரடியாக விளையாடிய பெடரர் மூன்றாவது செற்றையும் 6-4 என கைப்பற்றினார். இதன்மூலம் 7-6, 6-3, 6-4 என்ற நேர் செற்களில் பெடரர் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

முன்னதாக இதே பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் தென்கொரியாவின் ஹியோன் சங், அமெரிக்க வீரரான டென்னிஸ் சாண்ட்கிரெனை எதிர்கொண்டார். இந்தப்போட்டியின் முதல் செற்றை 6-4 என சங் கைப்பற்றினார். தொடர்ந்து சிறப்பாக விளையாடிய சங் இரண்டாவது செற்றை 7-6 என போராடிக் கைப்பற்றினார். இறுதியாக மூன்றாவது செற்றையும் 6-3 எனக் கைப்பற்றிய சங், 6-4, 7-6, 6-3 என்ற நேர் செற்களில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள அரையிறுதிச் சுற்று போட்டிகளில் சிலிச் - எட்மண்ட், சங் - பெடரர் ஆகியோர் பலப்பரீட்சை நடத்த உள்ளனர். (அ)

# சங்காவுக்குப் பெருமை




கொழும்பு, ஜன.25

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் உலக சாதனை படைத்த இலங்கை வீரர் ஹசித போயகொடவை குமார் சங்ககாரா பாராட்டியுள்ளார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் இலங்கை - கென்யா அணிகள் மோதின. இந்தப் போட்டியில் இலங்கை வீரர் ஹசித போயகொட 152 பந்துகளில் 191 ஓட்டங்கள் குவித்தார். இதன் மூலம் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக ஓட்டம் குவித்த வீரர் என்ற புதிய உலக சாதனையை ஹசித படைத்தார். இந்த நிலையில், ஹசிதவை இலங்கை ஜாம்பவான் குமார் சங்ககாரா ருவிட்டரில் பாராட்டியுள்ளார். அதில், “அற்புதமான 191 ஓட்டங்களுக்காக வாழ்த்துக்கள் ஹசித போயகொட. உங்களால் எல்லோரும் பெருமை கொள்கிறோம்;” எனப் பதிவிட்டுள்ளார். (அ)



# அரையிறுதியில் பாகிஸ்தான்

வெலிங்டன், ஜன.25

நியூஸிலாந்தில் இடம்பெற்றுவரும் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதிபெற்றுள்ளது.

கிறைஸ்ட்சேர்ச்சில் நேற்று இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவை 3 விக்கெட்டுகளால் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதிபெற்றுள்ளது.

இந்தப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்கா, 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், வண்டிலே மக்வெட் 60 , ஜேஸன் நிமண்ட் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், முஹமட் மூஸா 3, ஷகீன் அப்ரிடி 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, 190 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், 47.5 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை யடைந்தது. துடுப்பாட்டத்தில், அலி ஸர்யப் ஆட்டமிழக்காமல் 74 , சாட் கான் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஜேஸன் நிமண்ட் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இந்தப்போட்டியின் நாயகனாக அலி ஸர்யப் தெரிவானார். (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 25.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.